செய்தி வெளியீடு எண் : 082 நாள் : 12.01.2023

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 116– வது வார்டு அமுதம் நியாய விலைக் கடையில் ஆய்வு மேற்கொண்டார்.**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.01.2023 அன்று சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 116–வது வார்டு அமுதம் நியாய விலைக் கடையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் முழுக்கரும்புடன் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரையுடன் ரூ.1000/– ரொக்கமாக பொங்கல் பரிசுப் தொகுப்பு மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகள் கடந்த 9–ந்தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில், தமிழ்நாடு அரசின் பொங்கல் பரிசுப் பொருள்கள் முறையாக வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் 11.01.2023 அன்று 116–வது வார்டு, வெங்கட்ராம் தெருவில் உள்ள அமுதம் நியாய விலைக்கடையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

நியாய விலைக்கடையில் பதிவேடுகளை பார்வையிட்டு, மொத்தமுள்ள குடும்ப அட்டைதாரர்கள் எண்ணிக்கை, இதுவரை வழங்கப்பட்டுள்ள தொகுப்புகள் எண்ணிக்கை விபரம் ஆகியவற்றை கேட்டறிந்தார். மேலும் பணியாளர் பதிவேடு, பொருட்கள் பதிவேடு மற்றும் இருப்புப் பதிவேடுகளை ஆய்வு செய்தார்.

அப்போது அங்கிருந்த பொதுமக்களிடம் பொருட்கள் முறையாக வழங்கப்படுகிறதா எனக் கேட்டறிந்தார். மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்புகள் அட்டவணையின்படி முறையாக விநியோகம் செய்திடவும், அனைத்து பதிவேடுகளையும் முறையாக பராமரித்திடவும் பணியாளர்களை கேட்டுக்கொண்டார். அப்போது பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) திரு.நே.சிற்றரசு அவர்கள் உடனிருந்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in